

மறைந்த தி.மு.க. முத்த முன்னோடி தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் முன்னாள் மாநில சட்ட திருத்தக் குழு உறுப்பினர் அண்ணா விருது பெற்ற வழக்கறிஞர் மிசா. இராமநாதன் அவர்களுக்கு தமிழ்நாடு இயற்கை வளம் மற்றும் சுரங்கத்துறை அமைச்சர், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ் ரகுபதி, உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் மற்றும் புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்ல பாண்டியன் மற்றும் திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

### தாமிரபரணி ஆற்றுப் பாலத்திலிருந்து கீழே விழுந்து உயிரிழந்த

# காவலர் சங்கர் குமார் குடும்பத்தினருக்கு ரூ.30 லட்சம் நிவாரண உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு !

**சென்னை, ஜீன் 21 - தூத்துக்குடி மாவட்டம், முறப்பநாடு, தாமிரபரணி ஆற்றுப் பாலத்திலிருந்து கீழே விழுந்து உயிரிழந்த காவலர் சங்கர் குமார் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்,**

முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

தூத்துக்குடி மாவட்டம், முறப்பநாடு காவல் நிலையத்தில் காவலராகப் பணிப்புரிந்துவந்த சங்கர் குமார் (வயது 31) என்பவர் 18.06.2025 அன்று இரவு சுமார் 8.30 மணியளவில் முறப்பநாடு அருகில் தாமிரபரணி ஆற்றுப்பாலத்தில் ஏற்பட்ட விபத்து ஒன்றின் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது எதிர்பாராத விதமாக ஆற்றுப்பாலத்தில் உள்ள தடுப்புச் சுவரில் கை வைத்தபோது நிலை தடுமாறி பாலத்திலிருந்து கீழே விழுந்ததில் காயம் ஏற்பட்டு உடனடியாக திருநெல் வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையுமடைந்தேன்.

காவலர் சங்கர் குமார் அவர்களின் உயிரிழப்பு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

சங்கர் குமார் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு முப்பது இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### பாகிஸ்தானுடனான போர் நிறுத்தம்:

# அமெரிக்க அதிபரிடம் பிரதமர் மோடி பேசியதை வெளியிட வேண்டும்!

## காங்கிரஸ் கட்சி வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜுன் 21 - பாகிஸ்தானுடனான போர் நிறுத்தம் குறித்து அமெரிக்க அதிபரிடம் பேசிய விவகாரங்களை அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டி பிரதமர் மோடி தெரிவிக்க வேண்டும் என காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

பாகிஸ்தானுடனான பிரச்சினைகளில் அமெரிக்காவின் எந்த ஒரு மத்தியஸ்த்தையும் இந்தியா ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாது என அமெரிக்க அதிபரிடம், பிரதமர் மோடி திட்டவட்டமாக தெரிவித்து விட்டதாக இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் விக்ரம் மிஸ்ரி தெரிவித்திருந்தார்.

இவ்விவகாரம் குறித்து காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் அளித்த பேட்டியை பிடிஐ செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

கார்கில் போர் முடிந்த 3 நாட்களுக்குப் பிறகு கார்கில் ஆய்வுக்குழு அமைக்கப்பட்டதை போல, பஹல்காம் தாக்குதல் குறித்த ஆய்வுக் குழுவை ஒன்றிய அரசு அமைக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார். இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கு வர்த்தகத்தை ஒரு கருவியாக பயன்படுத்தியதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியதை பிரதமர் மோடி நாடாளுமன்றத்தில் மறுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

பாகிஸ்தான் ராணுவத் தளபதிக்கு அமெரிக்க அதிபர் வெள்ளை மாளிகையில் விருந்தளிப்ப தும், தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் பாகிஸ்தான் ஒரு சிறந்த கூட்டாளி என அமெரிக்க ராணுவத் தளபதி மைக்கேல் குரில்லா அறிவித்துள்ளதும் இந்தியாவுக்கான பெரிய பின்னடைவு எனகுறிப்பிட்டுள்ள ஜெய்ராம் ரமேஷ், பாகிஸ்தானுடனான போர் நிறுத்தம் குறித்து அமெரிக்க அதிபரிடம் பேசிய விவகாரங்களை அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டி பிரதமர் மோடி தெரிவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

# ‘அரசு ஆர்ட்ஸ்’ சுந்தரேசன் 7 ஆம் ஆண்டு நினைவு நாள்!



சென்னை, ஜுன் 21 - ‘அரசு ஆர்ட்ஸ்’சுந்தரேசன் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று முன்தினம் (19.6.2025 - வியாழக்கிழமை) கடைப்பிடிக்கப்பட்டது.

முரசொலி பொங்கல் மலர் மற்றும் தமிழினத் தலைவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் மலர்களை தன் கை வண்ணத்தால் அழகுற வடிவமைத்தவரும் தமிழினத் தலைவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் மற்றும் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அன்பை பெற்றவருமான ‘அரசு ஆர்ட்ஸ்’ நிர்வாக இயக்குநர் ‘அரசு ஆர்ட்ஸ்’ சுந்தரேசன் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று முன்தினம் (19.6.2025 - வியாழக்கிழமை) கடைப்பிடிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சி ‘அரசு ஆர்ட்ஸ்’எண்.78, சீனிவாச பெருமாள் சன்னதி முதல் தெரு, இராயப்பேட்டை, சென்னை 14, (புதுக்கல் லூரி பின்புறம்) எனும் முகவரியில் நடைபெற்றது.

### மயிலம் மத்திய ஒன்றியம்

# வீடூர் பிரகாஷின் தாயார் உண்ணாமலை அம்மாள் திருவுருவப்படம்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

மைலம், ஜுன் 21 - மயிலம் மத்திய ஒன்றிய திமுக மாவட்ட பிரதிநிதி வீடூர் பிரகாஷின் தாயார் மறைந்த உண்ணாமலை அம்மாள் திருவுருவப் படத்தை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. திறந்து வைத்து முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாளை முன்னிட்டு 1000நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்..

இதை அடுத்து அவரது திருஉருவப்பட திறப்பு விழா நிகழ்ச்சி மற்றும்முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி வீடூர்ஊராட்சியில் நடைபெற்றது.

மயிலம் மத்திய ஒன்றிய தி.மு.க. மாவட்ட பிரதிநிதி வீடூர்பிரகாஷ், வீடூர் ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ்வரி பிரகாஷ் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு கழக இரு வண்ணக் கொடியினை ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து உடல் நலக் குறைவால் காலமான உண்ணாமலை அம்மாள் அவர்களின்திருஉருவப்படத்தை திறந்து வைத்த விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் கலைஞரின் பிறந்த நாளை முன்னிட்டு 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



கடலூர் முதுநகர் மாலுமியார் பேட்டையில் புதிதாக கட்டப்பட்ட ரேஷன் கடையினை கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி திறந்து வைத்தார். இதில் குடிமைப் பொருள் தனி தாசில்தார் ஜெயக்குமார், கூட்டுறவு சார்பதிவாளர் பொது விநியோகத் திட்டம் தன்ராஜ், கூட்டுறவு சார்பதிவாளர் புருஷோத்தமன், முன்னாள் கூட்டுறவு சங்கத் தலைவர் ஆதி பெருமாள், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், மாநகராட்சி கவுன்சிலர்கள் கே.ஜி.எஸ்.சரத் தினகரன், ராதிகா பிரேம்குமார், கீர்த்தனா ஆறுமுகம், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் சுதாகர், முன்னாள் கவுன்சிலர் கோமதி சம்பத், இளைஞர் அணி பிரகாஷ், ரோட்டரி ராசன் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி, குருவேலப்பர் கோவில் ஊராட்சியில் நடைபெற்ற “மக்களுடன் முதல்வர்” மூன்றாம் கட்ட திட்ட முகாமினை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் துவக்கி வைத்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பி.ரெத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் துறை சார்ந்த அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### பெரம்பலூர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.அரிபாஸ்கர் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட - மாநகர - மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய–நகர–பகுதி–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 21.06.2025 | பூலாம்பாடி | மேற்கு மந்தைவெளி, கலைஞர் திடல் | விஜயரத்தினம் அ.அருண்குமார் |
| 2 | | அரும்பாவூர் | பாலக்கரை | விஜயரத்தினம் ந.காருண்யா |
| 3 | | ஆலத்தூர் கிழக்கு | சாத்தனூர் | எசனை ஆறுமுகம் அ.விஜயலெட்சுமி |
| 4 | 22.06.2025 | வேப்பந்தட்டை கிழக்கு | தம்பை | விஜயரத்தினம் இரா.கனிமொழி |
| 5 | | வேப்பந்தட்டை மேற்கு | நெற்குணம் | எசனை ஆறுமுகம் ப.வெங்கடேஷ் |
| 6 | 23.06.2025 | வேப்பூர் தெற்கு | காடூர் | விஜயரத்தினம் அ.சுஹாசினி |
| 7 | 24.06.2025 | பெரம்பலூர் நகரம் | தேரடி தெரு | எசனைஆறுமுகம் கு.குமரவேல் |
| 8 | 25.06.2025 | லப்பைகுடிக்காடு | பேருந்து நிலையம் | விஜயரத்தினம் சேக் அல்மாஸ்அலி |
| 9 | 26.06.2025 | பெரம்பலூர் | ஆலம்பாடி ஊராட்சி | எசனை ஆறுமுகம் ஜோ. கேத்ரினா மெர்லினா |
| 10 | | குரும்பலூர் | கலைஞர் திடல் | விஜயரத்தினம் மு.ராமமூர்த்தி |

**பெரம்பலூர்**

நாள் : 19-06-2025





நாகை மாவட்டம் கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. ஆலோசனைக் கூட்டம் கீழ்வேளூரில் நடைபெற்றது.கூட்டத்தில் நாகை மாவட்டக் கழக செயலாளர், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன் பேசினார். உடன் மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர், கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் இரா.சங்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினரும்.கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய செயலாளருமான ப.கோவிந்தராஜன், கீழ்வேளூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.பழனியப்பன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி தலைவர் ஏ.எஸ்.என். ராஜா, ஒன்றிய நிர்வாகிகள் ஏ.வேதநாயகம், தங்க மனோகரன், ஆர்.நடராஜன், ரவிக்குமார், பாரதிமோகன், சேக் முகமது மற்றும் பலர் உள்ளனர்.